**நீர் வளங்கள் சபை - 2023**

-----------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீர் வளங்கள் சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு

நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமத்துடன் தொடர்பும்இணக்கமின்மையும் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் என காட்டப்பட்டிருந்த ரூபா 1,638,000 இற்கான பெறுமதி தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பந்தி 54 இற்கு | 2022 ஆண்டின் கணக்குகள் தயாரித்த பின்னர் அந்த ஆண்டிற்கான வருமானத்துடன் உட்படுத்தப்பட வேண்டிய 05 இன்வொயிஸ்கள், தொலைபேசிக் கட்டண உறுதிச்சீட்டு ஒன்று | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி மீண்டும் வெளியிடப்பட்ட மீதிகள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட |

| | | | |
|---|---|---|---|
| | இணங்க மேற்கொள்ள வேண்டிய வெளிப்படுத்தல்கள் செய்திருக்கவில்லை. | மற்றும் பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ காணிக்காக குத்தகை ஒதுக்கும் போது மிகையாக ஒதுக்கப்பட்ட தொகையும் இதில் அடங்கியிருந்தது. 2024 ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 49 இற்கு முரணாக ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது 03 சொத்து வகுப்புக்களைச் சேர்ந்த 854 விடயங்களில் 150 மாத்திரம் ரூபா 80,754,510 தொகைக்கு மீள்மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருந்தது. மேலும், மீள்மதிப்பீட்டுச் சொத்துக்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 பந்தி 90 இற்கு இணங்க தேவையான வெளிப்படுத்தல்கள் செய்திருக்கவில்லை. | நீர் வளங்கள் சபைக்குச் சொந்தமான 05 மாகாண அலுவலகங்கள் காணப்படுவதுடன் சபைக்கு சொந்தமாகக் காணப்படும் அனைத்துச் சொத்துக்களும் ஒவ்வொரு அந்த ஒவ்வொரு பிரிவுகளிலும் காணப்படுகின்றது. எமது சபையில் காணப்படும் ஊழியர் பற்றாக்குறை காரணமாக யாழ்ப்பாணம் மற்றும் இரத்மாலான பிராந்திய அலுவலகங்களில் காணப்படும் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்காக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஒத்துழைப்பு கிடைக்காமையால் அந்த இரண்டு மாவட்டங்களில் நீர் வழங்கள் சபையின் உத்தியோத்தர்கள் பங்குபற்றாமையால் மீள்மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்வதற்கு முடியாமல் போன காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டதென குறிப்பிடுகின்றேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி குறிப்பிட்ட சொத்து வகுப்புக்கள் முழுமையாக மீள்மதிப்பீடு செய்ய வேண்டியதுடன், அது தொடர்பாக வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | சபையினால் 2016 – 2018 காலப் பகுதியில் ரூபா 298,147,287 தொகைக்கு மீள்மதிப்பீடு செய்து தற்போது பயன்படுத்தப்படுகின்ற 04 சொத்து வகுப்புக்களுக்குரிய 850 விடயங்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலம் முடிவடைந்திருந்தமையால் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஏட்டுப் பெறுமதி சூனியமாக காணப்பட்டதுடன், அந்த சொத்துக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 42 பந்தியின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | பதவியணியினரின் பற்றாக்குறை காரணமாக இந்த விடயம் மேற்கொள்ள முடியாமல் போனதென அறிவிக்கின்றேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க ஆக்கபூர்வமாக ஆயுட்காலம் முடிவடைந்திருந்த சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் பந்தி 14 இற்கு முரணாக ரூபா 3,360,000 தொகைக்கான துளைக்கும் இயந்திரங்கள், துளைக்கும் நிறுவனங்கள் மற்றும் நிலக் கீழ் நீர் விஞ்ஞானிகள் பதிவு செய்யும் வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு நியமம் 5 இன் கீழ் வருமானங்களை இனங்காணலின் கீழ் வருமானம் அட்டுரு அடிப்படையில் இனங்காணப்படுகின்றது என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வருமானம் அட்டுரு அடிப்படையில் இனங்காணப்பட வேண்டும். |
| (உ) | நிலக் கீழ் நீர் ஆய்வுக்கான தகவல்கள் வளையமைப்பொன்று நிருவுவதற்காக செயற்திட்டம் உட்பட ஏனைய செயற்திட்டங்கள் மற்றும் ஏனைய பரிமாற்றப்படாத பெறுவனவுகளின் மூலம் கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 1,797,835,000 இற்கான வருமானம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இணங்க கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மேற்கூறிய வருவாயை இனங்காண்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பந்தி 107 இற்கு இணங்க வெளிப்படுத்தியிருக்கவில்லை. | இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு நியமங்கள் 11 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்யும் கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |
| (ஊ) | நீர்ப்பாசன அமைச்சினால் நிலக்கீழ் நீர் ஆய்வுத் தகவல்கள் வலையமைப்பொன்று நிறுவும் செயற்திட்டம் 2022 திசெம்பர் 31 திகதி பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது. | | |
| (i) | இதன் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறை அல்லாத சொத்துக்கள் மீளாய்வாண்டு இறுதியளவில் செயற்திட்டப் பணிப்பாளரினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 336,301,185 தொகைக்கான அந்த சொத்துக்கள் கணக்கீடு செய்திருக்கவில்லை. | செயற்திட்டத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சொத்துக்களின் கிரயம் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையொன்று காணப்பட்டதுடன், 2023 ஆண்டின் செயற்திட்டச் சொத்துக்கள் கிரயம் சரியாக மதிப்பீடு செய்தல் தொடர்பாக நீர்ப்பாசன அமைச்சுச் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி செயற்திட்டச் சொத்துக்களை கணக்கீடு செய்தல் மற்றும் அதற்கு சமமான பெறுமதியொன்றினை வருமானம் ஒன்றென |

| | | | |
|---|---|---|---|
| | | செயலாளரினால் நியமனம் செய்யப்பட்ட குழுவினால் வழங்கியிருந்த பரிந்துரைகளுக்கு இணங்க செயற்திட்டப் பணிப்பாளரினால் சரியாக சொத்துக்கள் பெறுமதியொன்று உட்படுத்தப்பட்ட அறிக்கையொன்று நீர்வழங்கல் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், 2024.02.28 திகதி வரை அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையால் அந்தச் சொத்துக்கள் ஏடுகளுக்ககு எடுக்க முடியாமல் இருந்ததுடன், 2024 ஆண்டின் கணக்குகளில் இந்த சொத்துக்களை உட்படுத்ததுவற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கைகள் 11 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | ரூபா 1,738,833,941 இற்கான கிரயத்திற்கு சபைக்குச் சாட்டப்பட்டிருந்த உயர்தொழில்நுட்பத்துடனான உபகரணங்களுடன் 190 குழாய் கிணறுகள் மற்றும் அவற்றின் பராமரிப்பு உபகரணங்கள் ரூபா 1,534,077,024 இற்கான பெறுமதிக்கு சபைக்கு சாட்டப்பட்டிருந்த நுகர்வுப் பண்டங்களின் பெறுமதி இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பந்தி 83 இற்கு இணங்க மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சொத்துக்களின் கிரயம் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையொன்று காணப்பட்டதுடன், 2023 ஆண்டின் செயற்திட்டச் சொத்துக்கள் கிரயம் சரியாக மதிப்பீடு செய்தல் தொடர்பாக நீர்ப்பாசன அமைச்சுச் செயலாளரினால் நியமனம் செய்யப்பட்ட குழுவினால் வழங்கியிருந்த பரிந்துரைகளுக்கு இணங்க செயற்திட்டப் பணிப்பாளரினால் சரியாக சொத்துக்கள் பெறுமதியொன்று உட்படுத்தப்பட்ட அறிக்கையொன்று நீர் வளங்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், 2024.02.28 திகதி வரை அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையால் அந்தச் சொத்துக்கள் ஏடுகளுக்ககு எடுக்க முடியாமல் இருந்ததுடன், 2024 ஆண்டின் கணக்குகளில் இந்த சொத்துக்களை உட்படுத்ததுவற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கைகள் 11 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி செயற்திட்டச் சொத்துக்களை கணக்கீடு செய்தல் மற்றும் அதற்கு சமமான பெறுமதியொன்றினை வருமானம் ஒன்றென கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | செயற்திட்டத்தினால் 02 கப் வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டு அதனை நடமாடும் ஆய்வுகூடம் என மாற்றப்பட்டு 2023 பெப்ரவரி 15 திகதி சபைக்கு ஒப்படைக்கப்பட்டு இருந்ததுடன், அவற்றின் பெறுமதி ரூபா 33,541,773 தொகை என இயந்திர உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 57 இற்கு இணங்க இந்த 02 வாகனங்களின் பெறுமதி மோட்டார் வாகனங்களின் கீழும் அங்கு பொருத்தப்பட்ட உபகரணங்கள் ஆய்வுகூட உபகரணங்கள் என கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி, நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இன்வொயிஸ் பெறுமதியின் படி 02 மோட்டார் வாகனங்களின் கிரயமாகிய ரூபா 21,700,000 இற்கான தொகை மீது 25 சதவீதமாகிய ரூபா 4,746,875 தொகை பெறுமானத் தேய்வு கணிக்க வேண்டியிருந்த போதிலும் இயந்திர உபகரணங்கள் என்று கணித்து 20 சதவீதம் ரூபா 3,352,340 தொகை பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்தமையால் பெறுமானத் தேய்வு ரூபா 1,394,535 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். 2024 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க சரியான பெறுமானத் தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ள வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பந்தி 56 இற்கு இணங்க பணம் மற்றும் பணத்துக்கு சமமானவைகளில் ஆக்கக்கூறுகள் அனைத்தும் வெளியிடப்பட வேண்டியிருந்த போதிலும், இலங்கை வங்கியின் இலக்கம் 0002323267 கொண்ட நடைமுறைக் கணக்கு தொடர்பாக பேணிச் செல்லப்பட்டிருந்த நிதிய முகாமைத்துவச் சேமிப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 61,200,069 இற்கான மீதி தனியாக காட்டப்படுவதற்கு பதிலாக குறிப்பிட்ட நடைமுறைக் கணக்கில் மீதியுடன் ஒன்றாக காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் கணக்கு இலக்கம் 0002323267 இன் காட்டப்பட்டுள்ள மீதியில் இந்த நிதியக் கணக்கின் மீதியும் அடங்கியுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி பணத்தில் பணத்திற்கு சமமானவைகளின் ஆக்கக்கூறுகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஒக்தோபர் 30 திகதி ரூபா 61,062,600 இற்காக மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 80 ஆய்வுகூட உபகரண விடயங்கள் பெறுமதி ரூபா 5,465,000 தொகையாக ரூபா 55,597,307 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக மேற்கூறிய சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வுச் செலவு ரூபா 963,393 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | நீர் வளங்கள் சபையின் சொத்துக்களின் முகாமைத்துவ மென்பொருளின் வழுவொன்று காரணமாக இந்த ஆய்வுகூட உபகரணங்களில் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி வித்தியாசமடைந்திருந்தது. | மீள்மதிப்பீட்டுச் சொத்துக்கள் மற்றும் சரியான பெறுமானத் தேய்வு நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1964 இன் 29 ஆம் இலக்க நீர் வளங்கள் சபைச் சட்டத்தின் பிரிவு 16 இற்கு இணங்க அமைச்சரினால் 2017 மார்ச் 16 திகதிய 2010/23 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட கட்டளைகள் | | | |
| (i) | கட்டளை 2 | குழாய் கினறு நிர்மாணிப்பதில் ஈடுபடும் அனைத்து நிறுவனங்களும் சபையில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவில் 42 நிறுவனங்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் கடந்த ஆண்டு 72 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், பதிவு செய்திருக்காத மற்றும் பதிவு செய்தலை புதுப்பித்திருக்காத நிறுவனங்கள் குழாய் கிணறுகள் | குழாய் கினறுகளை நிர்மாணிக்கும் நிறுவனங்களை பதிவு செய்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அது தொடர்பாக பொதுமக்களை அறிவுருத்தும் அலுவல்கள் | குழாய் கினறுகள் நிர்மாணிப்பதில் ஈடுபடும் அனைத்து நிறுவனங்களையும் இனங்காண்பதற்கு வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிர்மாணிப்பதில்லை என உறுதிப்படுத்திக்கொள்வதற்கு சபையில் பதிவு செய்திருக்காத நிறுவனங்கள் எவை என இனங்காண்பதற்காக போதியளவு வேலைத் திட்டமொன்று சபையில் காணப்படவில்லை. மேலும், மேற்கூறிய கட்டளையின் படி பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களினால் புதிய நிர்மாண வேலை மேற்கொள்ளும் அனைத்து குழாய் கினறுகளின் தரவுகள் அடங்கிய அறிக்கையொன்று ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒருமுறை சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பதிவு செய்யபட்ட 42 நிறுவனங்களில் 04 நிறுவனங்களினால் மாத்திரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்டது. மற்றும் நீர் வளங்கள் சபைச் சட்டத்தின் குழாய் கினறு நிர்மாணிக்கும் நிறுவனங்கள் பதிவு செய்யாமை தொடர்பாக எடுக்கக்கூடிய சட்ட ஏற்பாடுகள் காணப்படாமையால் குறிப்பிட்ட சட்டம் திருத்தப்பட்டதுடன், தேவையான அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது பதிவு செய்துள்ள அனைத்து குழாய்க் கினறு துளைக்கும் நிறுவனங்களை அறிவுருத்தி மீண்டும் நீர் வளங்கள் சபையில் பதிவு செய்தலை நாளதுவரை ஆக்கும் படி எழுத்துமூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (ii) | கட்டளை 3 | நீரை போத்தல்களில் அடைக்கும் கைத்தொழில்களில் மற்றும் குடிபானங்கள் உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனம் ஒன்று அல்லது நபரொருவர் இயற்கை நீர் உற்றொன்று அல்லது நிலக்கீழ் நீர் தனது உற்பத்தி அலுவல்களுக்காக பயன்படுத்தப்படின் ஒவ்வொரு 06 மாதங்களுக்கும் ஒருமுறை அந்த நீர் மூல வளத்தின் நீர் மாதிரியொன்று அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுகூடம் ஒன்றின் மூலம் பரிசோதனை மேற்கொள்ளப்பபட்டு குறிப்பிட்ட பகுப்பாய்வு அறிக்கை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த 42 நிறுவனங்களில் 09 நிறுவனங்களினால் மாத்திரம் மேற்கூறிய அறிக்கை | குறிப்பிட்ட இரசாயன அறிக்கை நீர் வளங்கள் சபைக்கு சமர்ப்பிக்கும் படி குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு எழுத்துமூலம் அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, பரிசோதனை அறிக்கை நீர் வளங்கள் சபைக்கு கிடைக்கப் பெற்று வருகின்றது. மேலும், அரசாங்க நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு இந்த அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஒத்துழைப்புக்களை பெற்று இந்த விடயத்தை மேலும் முறைப்படுத்துவற்கு | இயற்கை நீர் ஊற்றொன்று அல்லது நிலக் கீழ் நீர் உற்பத்தி நிறுவனங்களினால் நீர் மாதிரிகள் பரிசோதனை செய்து அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (iii) | கட்டளை 6 | இயற்கை நீர் ஊற்றுக்கள் அல்லது ஆழமான அல்லது ஆழமில்லாத நிலக் கீழ் நீர் பயன்படுத்தும் அரச அல்லது அரச அல்லாத நிறுவனங்களினால் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் அடங்கிய 1 முதல் 5 வரையான கட்டளைக்கு இணங்க நடவடிக்கை எடுக்காத நிறுவனங்கள், அமைப்புக்கள் அல்லது ஆட்களுக்கு எதிராக 1999 இன் 42 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1964 இன் 29 ஆம் இலக்க நீர் வளங்கள் சபைச் சட்டத்தின் பிரிவு 20 இற்கு இணங்க சட்டரீதியாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலக் கீழ் நீரின் பண்புசார் தன்மை தொடர்பாக அறிக்கைகள் வழங்கப்படாத நிறுவனங்கள் மற்றும் துளைத்தல் அறிக்கை சமர்ப்பிக்கப்படாத நிறுவனங்களுக்காக தேவையான சட்ட நடவடிக்கைகள் தற்போது காணப்படும் சட்டத்தின் படி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஏனைய அரச நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இந்த அறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக தேவையான ஒத்துழைப்புக்களை பெற்று இந்த விடயத்தை மேலும் முறைப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இயற்கை நீர் ஊற்றுக்கள் அல்லது ஆழமான அல்லது ஆழமற்ற நிலக்கீழ் நீர் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு உரிய கட்டளைகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1981 இன் 26 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்திய) சட்டத்தின் பிரிவுகள் 10 மற்றும் 11 | நிதியத்திற்காக தொழில் வழங்குனர் பங்களிப்பு 12 சதவீதம் தொழிலாளர் பங்களிப்பு 8 சதவீதம் ஆக காணப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு கூடிய சதவீதமொன்றிற்கு இணங்க முடியும். எவ்வாறாயினும், சபையினால் தொழில் வழங்குனர் பங்களிப்பு 12 சதவீதமாக இருக்கும் போது ஊழியர்களிடம் 10 சதவீதம் அறவீடு செய்யப்பட்டு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக ஆணையாளருக்கு அறிவுருத்தியிருக்கவில்லை. | தேவையான சரியாக்கல் மேற்கொள்வதற்காக குறித்துக்கொள்ளப்பட்டது . | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதாசாரத்தை விட கூடுதலான விகிதாசாரம் ஒன்று தொகையொன்று அறவீடு செய்தல் தொடர்பாக ஆணையாளருக்கு அறிவுருத்த வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் | | | |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரச தொழில் முயற்சிகளின் கூட்டிணைந்த கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டல் கோவை | | | |
| (i) வழிகாட்டல் இலக்கம் 2.2.1 | சபைக்காக பிரதான செயலாற்றுகை சுட்டிகள் தீர்மானிக்கப்பட்டு அல்லது கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி சபையை செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீர் வளங்கள் சபைக்காக செயற்பாட்டுப் தத்துவம் மற்றும் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அண்மைக் காலம் முதல் தேசிய நீர்த் திட்டம் தயாரித்தல் மற்றும் தேசிய நீர்ச் செயலகம் நிறுவுதலும் அத்துடன், நீர் வளங்கள் சபையை மீள்கட்டமைப்புச் செய்தல் ஆகிய கருமங்களுக்காக இந்த அலுவல்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. | செயலாற்றுகை சுட்டிகள் மற்றும் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு அதன்படி செயற்பட வேண்டும். |
| (ii) வழிகாட்டல் 2.2.2 (ஆ) | பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு முன்னர் பணிப்பாளர் சபை பத்திரங்களை வாசித்து ஆய்வு செய்தவற்காக சபையின் அங்கத்தவர்களுக்கு சமர்ப்பித்தல், தீர்மானம் எடுப்பதற்கு மற்றும் பொறுப்பாக இருத்தலை உறுதிப்படுத்தலுக்கு தேவையான சிறந்த நம்பிக்கையான முகாமைத்துவ தகவல் முறைமையொன்று பேணிச் செல்லல், கணக்காய்வுக் குழுக்கல் உட்பட ஏனைய உப குழுக்களின் தீர்மானங்கள் கால ரீதியாக தொடர் நடவடிக்கை எடுத்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் தேவைப்பாடுகளை நிறைவேற்றக்கூடிய நிதி மற்றும் நிதி அல்லாத உச்சமட்ட தகவல்கள் வாசிப்போரை | குறித்துக்கொண்டேன். | வழிகாட்டல்களுக்கு இணங்க வலுவான கட்டுப்பாட்டுச் சட்டகமொன்று நிறுவுவதற்கு மற்றும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கவரக்கூடியவாறு நிறுவனத்தின் இணைய தளத்தின் மூலம் வெளிப்படுத்துதல் ஆகிய தேவைப்பாடுகளை நிறைவேற்றக்கூடிய வலுவான கட்டுப்பாட்டுச் சட்டகம் ஒன்று நிறுவுவதற்கு பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| | (iii) வழிகாட்டல் 2.4 | பணிப்பாளர் சபையினால் சபையுடன் காணப்படும் தொடர்பு பற்றி சபையின் செயலாளருக்கு வருடாந்த கூற்றொன்று மேற்கொண்டிருக்காததுடன், சபையின் வருடாந்த அறிக்கையில் ஒவ்வொரு பணிப்பாளர் தொடர்பாகவும், குறிப்பிட்ட வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் செயலாளர் பதவியொன்று காணப்படாததுடன், குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக செயற்படுத்துவற்காக குறித்துக்கொண்டேன். | வருடாந்த கூற்றொன்று பெற்றுக்கொள்வதற்காக பணிப்பாளர்கள் தொடர்பான விபரங்கள் வருடாந்த அறிக்கையின் காட்டப்பட வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 திகதிய PED/01/2021 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பொது முயற்சிகளுக்கான கூட்டிணைந்த கட்டுப்பாட்டுக்குரிய செயற்பாட்டுக் கைநூலின் பந்தி 6.6 | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைபு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் 2023 ஆண்டிற்கான வரைபு வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கபட்டிருக்கவில்லை. | தற்போது 2023 ஆண்டிற்கான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதுடன், 2024 இறுதிக் கணக்குகளுடன் வரைபு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குறித்துக்கொண்டேன். | வரைபு வருடாந்த செயலாற்றுகை அறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 1,383,454,000 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர் மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 27,506,000 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 1,410,960,000 இற்கான தேறிய முன்னேற்றம் ஒன்று காட்டப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் செலவுகளுக்கு ஒப்பாக மீளாய்வாண்டின் அரச மானியம் ரூபா 7,254,000 இற்கான தொகையினால் மற்றும் நீர்ப் பரிசோதனை மற்றும் ஆய்வு வருமானம் ரூபா 18,008,000 தொகையினால் அதிகரித்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலக் கீழ் ஆய்வு இணையதளம் ஒன்றை நிறுவுதற்கான முன்னோடிச் செயற்திட்டத்தின் கருமம் ஒன்றாக 02 நடமாடும் ஆய்வுகூடங்கள் நிறுவுதற்காக செயற்திட்டத்தினால் ரூபா 21,700,000 தொகைக்காக 02 டபல் கப்கள் கொள்வனவு செய்யப்பட்டு செயற்திட்டப் பணிபாளர் பெயரில் பதிவு செய்யப்பட்டு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ஒப்படைத்து நடமாடும் ஆய்வுகூடமாக மாற்றப்பட்டிருந்ததுடன், அதற்காக பெறுகை வழிகாட்டல் கடைபிடிக்கப்பட்டு நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நீர்ப்பாசன அமைச்சின் கீழ் Turnkey EPC (Engineering Procurement & Construction) செயற்திட்டமொன்றென நீர் வளங்கள் சபைக்காக நிலக்கீழ் நீர் ஆய்வு முறைமையொன்றின் மூலம் நாட்டில் தெரிவு செய்யப்பட்ட சில வலயங்களில் நிறுவுவதற்காக நெதலாந்து ஒப்பந்தக் கம்பனி ஒன்றான Eijelkamp நிறுவனத்தினூடாக இந்த செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இந்த செயற்திட்டத்தின் உடன்பட்ட செய்முறையின் படி நீர் வளங்கள் சபையன் அடிப்படை தொழில்நுட்ப தேவைப்பாடுகளின் அடிப்படையில் ஒப்பந்த கம்பனியினால் பெறுகை அலுவல்கள் மேற்கொண்ட போதும் பெறுகை அலுவல்கள் தொடர்பாக சபைக்கு பெறுகை செயற்பாடுகளுடன் தொடர்பு கொள்வதற்கு சந்தர்ப்பம் ஒன்று காணப்படவில்லை. | நடமாடும் ஆய்வுடங்கள் நிர்மாணித்தல் பெறுகை வழிகாட்டலின் படி மேற்கொள்ள வேண்டும். |
| (i) | குறிப்பிட்ட 02 வாகனங்கள் நடமாடும் ஆய்வுகூடங்கள் என மாற்றப்பட்டு 2023 பெப்ரவரி 15 திகதி சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், மாற்றிய அலுவல்களுக்காக ரூபா 11,841,774 தொகை தனியார் கம்பனியினால் அறவீடு செய்திருந்தது. அவ்வாறாயினும், இந்த 02 வாகனங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்த பின் பக்கப் பகுதிகள் (Rear Tube Tail Body) இரண்டும் சபைக்கு திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை . இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(1) இணங்க விசாரணை ஒன்று மேற்கொண்டு அதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை | இந்த இரண்டு நடமாடும் ஆய்வு கூட வாகனங்களுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்டிருந்த செயற்திட்ட மதிப்பாய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருந்தது. தனிப்பயனாக்கப்பட்ட வெளியீட்டு அலகுகள் (Customized Double Cabs as Mobile Test Unit) எனவாகும். அதன்படி, ஒப்பந்தக் கம்பனியினால் இந்த பெறுகைகள் மற்றும் விண்ணப்பிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப விபரக் குறிப்புகள் மீது தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அங்கு பிரதான ஒப்பந்தக்காரரினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இரண்டு டபல் கப் வாகனங்களும் நேரடியாக குறிப்பிட்ட | நிதிப் பிரமாணங்களின் படி விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்மானித்திருக்கவில்லை. | தனிப்பயனாக்கப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு அந்த அனைத்து விடயங்களும் முடிவடைந்த பின்னர் செயற்திட்டப் பணிப்பாளரினால் பூர்த்தி செய்யப்பட்ட அலகு ஒன்றென இந்த நடமாடும் ஆய்வுகூட வண்டி இரண்டும் செயற்திட்டத்திற்கு 2022.09.15 திகதி எழுத்துமூலம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | |
| | (ii) 02 நடமாடும் ஆய்வுகூட வாகனங்கள் 2023 மே 02 திகதி சபையின் தலைவரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட போதிலும் நடமாடும் ஆய்வுகூடம் என பதிவு செய்தலை திருத்தியிருக்கவில்லை. | இந்த இரண்டு ஆய்வுகூட நடமாடும் வண்டிகளும் செயற்திட்ட பணிப்பாளரின் கீழ் பதிவு செய்யப்பட்டு பின்னர் சபையின் பெயரில் சாட்டப்பட்டுள்ளதுடன், மோட்டார் வாகனத் திணைக்களத்தின் இரண்டு வாகனங்களும் இரண்டு ஆய்வுகூட வாகனங்கள் என பதிவு செய்யப்பட்டிருக்கப்படாமையால், மாற்றுவதற்கு காணப்படும் இயலுமையை கண்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. | குறித்த இரண்டு கப் வண்டிகளும் நடமாடும் ஆய்வுகூடங்கள் என பதிவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள 40 பர்சஸ்களை கொண்ட காணியொன்று 2016 திசெம்பர் 06 திகதிய அமப/16/2500/724/099 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் 30 வருட காலப் பகுதிக்காக நீர் வழங்கல் சபைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. புதிய தலைமை அலுவல கட்டிடம் நிர்மாணிப்பதற்காக உத்தேசித்திருந்த, அந்தக் காணிக்காக அரச பிரதான விலை மதிப்பீட்டாளரினால் வருடாந்தம் ரூபா 2,700,000 தொகைக்கான குத்தகை தொகையொன்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. காணிக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் குத்தகை உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்படாமல் | அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் படி சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் இலக்கம் 2ஏ இடத்தில் அமைந்துள்ள காணிக்குப் பதிலாக வழங்கப்பட்ட பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள காணியின் அனுபவிப்பினை 2016.10.10 நீர் வளங்கள் சபைக்கு ஒப்படைக்கப்பட்டது. நிலக்கீழ் நீர் ஆய்வு வலயமைப்பு செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிப்பதற்காக தீர்மாணிக்கப்பட்டிருந்த தரவு நிலையம் மற்றும் நீர் வளங்கள் சபையின் தலைமை அலுவலகத்துடன், ஆய்வுகூடம் இந்தக் காணியை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டு தேவையான அங்கீகாரங்களும் கூட பெற்றிருந்ததுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் காணிக்கான உடன்படிக்கையில் கையொப்பமிடுவதை தாமதப்படுத்திய | முறையான அங்கீகாரத்தின் மீது நிலுவைத் தொகைகள் பதிவழிக்க வேண்டியதுடன், நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் குத்தகை உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு தேவையான இணக்கப்பாடுகள் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

சபையினால் 2016 ஆண்டு முதல் 2023 ஒக்தோபர் வரை குத்தகையாக ரூபா 24,906,879 தொகை அந்த அதிகார சபைக்கு செலுத்தியிருந்த போதிலும் அந்த காணி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதேபோல், நிலக்கீழ் நீர் ஆய்வுத் தகவல்கள் வலையமைப்பொன்று நிறுவுவதற்கான முன்னோடிச் செயற்திட்டமொன்றின் கீழ் இந்தக் காணி தலைமை அலுவலகக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக 2018 ஆண்டு முதல் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், முறையான குத்தகை உடன்படிக்கையொன்று காணப்படாமையால் ஏற்பாடுகளை பயன்படுத்த முடியாமல் இருந்தது. அதேபோல் அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 6(1) இன் கீழ் கொழும்பு 07 ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள காணிக்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 56,409,666,000 தொகைக்கான நிலுவை குத்தகைத் தொகையை செலுத்துவதன் மூலம் அல்லது முறையான செய்முறை ஒன்றின் கீழ் பதிவழித்தல் மேற்கொள்ளப்படும் வரை டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள இந்தக் காணிக்காக நீண்ட கால அடிப்படையிலான குத்தகை உடன்படிக்கைக்கு அணுகுவதை நகர அபிவிருத்தி அதிகார சபை நிராகரித்திருந்தது.

காரணத்தினால் செயற்திட்டக் காலம் முடிவடைந்ததுடன், அந்த சந்தர்ப்பம் நழுவியது. மேல் மாகாண காணி ஆணையாளருக்கு செலுத்த வேண்டியிருந்த நிலுவைத் தொகையாகிய ரூபா 56,409,666 தொகையினை செலுத்துவதன் மூலம் அல்லது அமைச்சரவை அங்கீகாரத்துடன் பதிவழித்த பின்னர் உடன்படிக்கை கையொப்பமிடப்படும் என நகர அபிவிருத்தி அதிகார சபை அறிவித்திருத்ததை கவனத்தில் எடுத்து நீர் வளங்கள் சபை தற்போது இந்த நிலுவைத் தொகையை பதிவழிப்பதற்கு அமைச்சவை அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக விஞ்ஞாபனம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(இ) முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 30 இன் ஏற்பாடுகளின் படி சபையின் பதவியணியை மீள்கட்டமைப்பதற்கு முன்னர் கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் JM-1 சம்பளத் தொகுதிக்கு உரித்தாயிருந்த சில பதவிகள் மீள் கட்டமைப்பின் போது MM தொகுதியின் (மத்திய

இந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நீர் வழங்கல்கள் மற்றும் தோட்ட உட்பட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டுள்ளதுடன், அதன்படி, குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு குற்றப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீர் வளங்கள் சபையினால் முறையான ஒழுக்காற்று

விசாரணை அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்து உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்காக செயற்பட வேண்டும்.

முகாமைத்துவ மட்டம்) பதவியாக மாற்றப்பட்டிருந்தது. 2012.10.03 திகதி முதல் செயற்படுமாறு மீள்கட்டமைப்பின் பின்னர் அந்த பதவிகளுக்கு உள்வாங்கப்படும் 05 உத்தியோகத்தர்களுக்கு வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் சுற்றறிக்கைகள் 01/2010 மற்றும் 01/2013 மற்றும் 01/2018 இன் கீழ் சலுகை அடிப்படையில் மோட்டார் வாகனங்கள் இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் போது மீள்கட்டமைப்பிற்கு முன்னரான காலப் பகுதியையும் MM தொகுதியில் பதவி வகித்ததென கணித்து பிழையான முறையில் சேவைக் காலத்தை கணித்து மேற்கூறிய மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக பரிந்துரைக்கப்பட்டிருந்து. முதலாவது சலுகை அடிப்படையில் வாகனங்கள் இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட இந்த உத்தியோகத்தர்களில் மூன்று உத்தியோகத்தர்களுக்கு 2018 ஆண்டில் மீண்டும் இரண்டாவது அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தது. அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு 10 வருட காலம் கடந்திருந்த போதிலும், அந்த உத்தியோகத்தர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த ஒழுக்காற்று விசாரணை இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக உரிய பரிந்துரைகள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு சபையினால் இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அந்த அலுவல்கள் தற்போது பூர்த்தி செய்யும் நிலையில் காணப்படுவதுடன், மே மாதம் இறுதியளவில் இந்த அறிக்கை வழங்கப்படும் என விசாரணை உத்தியோகத்தர்களினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தவிர தற்போது ஓய்வு பெற்றுள்ள 05 உத்தியோகத்தர்களுக்கும் குறிப்பிட்ட சேவைக் காலத்தை

சலுகை அடிப்படையில் மோட்டார் வாகனங்கள் இறக்குமதி செய்வதற்காக அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொண்டிருந்த போது, ஓய்வு

அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக பரிந்துரை வழங்கியிருந்த உத்தியோகத்தர்களுக்கு

| | | | |
|---|---|---|---|
| | பூர்த்தி செய்வதற்கு முன்னர் சலுவை வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு பரிந்துரை வழங்கப்பட்டு அந்த உத்தியோகத்தர்கள் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொண்டிருந்ததுடன், அதன்படி, இந்த உத்தியோகத்தர் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டதன் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கும் அந்த அனுமதிப்பத்திரத்திற்காக பரிந்துரை வழங்கியிருந்த உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்காததுடன், உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும் போது அரசிற்கு அறவிடப்பட வேண்டிய இந்த நட்டத்தை அறவீடு செய்யாமல் பணிக்கொடை செலுத்தப்பட்டிருந்தது. | பெற்றிருந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சுச் செயலாளருக்கு அறிவுருத்தி தேவையான அறிவுரைகளின் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு குறித்துக்கொண்டேன். | எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன், அனுமதிப்பத்திரங்கள் வழங்கியதன் மூலம் ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நீர் வளங்கள் சபைச் சட்டத்தை திருத்துவதற்குரிய வரைபு தயாரிப்பதற்காக தனியார் சட்ட வரைஞர் ஒருவரின் மற்றும் சட்ட வரைஞர் கம்பனியின் சேவையை பெற்றுக்கொண்டு கணக்காய்வு திகதி அளவில் ரூபா 645,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், சட்டம் திருத்தப்பட வேண்டும் என இனங்கண்டு 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இந்த கருமம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உத்தேச தேசிய நீர்க் கொள்கையை வெளியிடுதல் மற்றும் தேசிய நீர் வளங்கள் செயலகம் நிறுவுதல் அதனூடாக நீர் வளங்கள் சபையை மீள் கட்டமைப்பதற்கான காரணங்களினால் நீர் வளங்கள் சபைச் சட்டம் திருத்துதல் ஸ்தம்பிதமடைந்திருந்தது. | நீர் வளங்கள் சபைச் சட்டத்தை திருத்தும் அலுவல்கள் விரைவு படுத்தப்பட வேண்டும். |
| (உ) | 2016 ஆண்டின் போது 30 வருட காலத்திற்காக வாடகை அடிப்படையில் சபைக்கு உரித்தாக்கியிருந்த அனுராதபுரம் சுற்றுலா விடுதி நிர்மாணிக்கப்பட்டிருந்த காணி 07 வருடங்களை மிகைத்திருந்த போதிலும் வாடகை உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருக்காததுடன், இந்த காணிக்காக வாடகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனுராதபுரம் சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணி தொடர்பாக வாடகை செலுத்துவதற்கு காணியினை நிலஅளவை செய்வதற்காக பிரதேச செயலாளர் ஊடாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட நிலஅளவையாளர் ஒருவரை தொடர்பு கொண்டு இது விடயமாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் இந்தக் காணி குளக் காப்புச் சேமப் பகுதியில் அமைந்துள்ளமையால் சிக்கலை தீர்த்துக்கொள்ள முடியாதிருந்தது. | குளக் காப்புச் சேமப் பகுதியில் அமைந்துள்ள காணியொன்றிக்காக வாடகை உடன்படிக்கைக்கு அணுகுவதில் காணப்படும் இயலுமையை விசாரணை செய்து அதன்படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | சபையினால் 2018 ஆண்டு முதல் நில நீர் விஞ்ஞானிகள் பதிவு செய்து அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் திறன்தொழில் சேவையொன்று வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 1964 இன் 29 இலக்க நீர் வளங்கள் சபைச் சட்டத்தின் கீழ் அதற்கான சட்ட ஏற்பாடுகள் கிடைத்திருக்காததுடன், நில நீர் விஞ்ஞானிகள் 12 இற்கும் 18 இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையினர் வருடாந்தம் பதிவு செய்யப்பட்டிருந்தது. | குழாய்க் கிணறுகள் நிர்மாணிப்பதற்காக நீர் வளங்கள் சபையின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டியிருந்தமையால் அந்த அங்கீகாரத்திற்காக குறிப்பிட்ட இடத்தில் நிலத்தின் கீழ் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கையொன்று சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக மாத்திரம் வெளி நில நீர் விஞ்ஞானிகள் பதிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த அலுவல்களை முறைப்படி மேற்கொள்வதற்காக நீர் வளங்கள் சபைச் சட்டத் திருத்தத்தின் போது குறிப்பிட்ட விடயங்கள் உட்பட தேவையான அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், பணிப்பாளர் சபை அறிவுரையின் படி இதற்கான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட ஏற்பாடுகள் உட்பட நீர் வளங்கள் சபைச் சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயற்பாடுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை நிலக் கீழ் நீர் காணப்படும் பொருண்மையான மற்றும் பண்புசார் நிலைமைகளை முகாமைத்துவம் செய்வதற்கான முறையொன்று நிறுவுதற்கு இலங்கைக்கான நிலக்கீழ் வலையமைப்பு ஒன்று நிறுவுதற்கான முன்னோடிச் செயற்திட்டத்திற்காக சிறுசீரக நோய் பரவலாக காணப்படும் அனுராதபுரம், பொலன்னறுவை, மொணராகல மற்றும் புத்தளம் என தெரிவு செய்யப்பட்ட 04 மாவட்டங்களில் செயற்படுத்துவதற்காக 2015 ஜூலை 29 திகதி අමප/15/1087/644/005 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட செயற்திட்டம் யூரோ 20,629,921 கிரயத்தில் செயற்படுத்துவதற்காக நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரினால் நெதர்லாந்தின் ரோயல் அய்கல்காம்ப் நிறுவனத்துடன் 2017 ஒக்தோபர் 03 | நீர்ப்பாசன அமைச்சின் கீழ் Turnkey EPC (Engineering Procument Construction) செயற்திட்டமொன்றென நீர் வளங்கள் சபைக்காக நிலக்கீழ் நீர் ஆய்வு முறைமையொன்றின் மூலம் நாட்டில் தெரிவு செய்யப்பட்ட சில வலயங்களில் நிறுவுவதற்காக நெதலாந்து ஒப்பந்தக் கம்பனி ஒன்றான Eijtlkpmp நிறுவனத்தினூடாக இந்த செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இந்த செயற்திட்டத்தின் உடன்பட்ட செய்முறையின் படி நீர் வளங்கள் சபையன் அடிப்படை தொழில்நுட்ப தேவைப்பாடுகளின் அடிப்படையில் ஒப்பந்த கம்பனியினால் பெறுகை அலுவல்கள் மேற்கொண்ட போதும் பெறுகை அலுவல்கள் தொடர்பாக சபைக்கு பெறுகை செயற்பாடுகளுடன் தொடர்பு கொள்வதற்கு சந்தர்ப்பம் ஒன்று கிடைத்திருக்கவில்லை. | நடமாடும் ஆய்வுடங்கள் நிர்மாணித்தல் பெறுகை வழிகாட்டலின் படி மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் அலுவல்கள் 2022 திசெம்பர் 31 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்தச் செயற்திட்டத்தின் கிரயமாகிய யூரோ 20,629,921.18 எனப்படும் ரூபா 5,521,329,000 தொகையில் 85 சதவீதம் அதாவது யூரோ 17,535,433 தொகை நெதர்லாந்தின் ரேபோ வங்கியிலிருந்து (Rabo Bank) வருடாந்தம் 1.45 சதவீத சலுகை வட்டி வீதத்தின் மீது 10 வருடங்களில் சமமான 20 தவணைகளினால் திருப்பிச் செலுத்துவதற்காக இலங்கை அரசினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மீதியான 15 சதவீதம் யூரோ 3,094,488.18 இற்கான தொகை இலங்கையின் ஹட்டன் நெஷனல் வங்கியிலிருந்து 03 வருட சலுகைக் காலத்தின் பின்னர் 2025 இரண்டாவது அறையாண்டு முதல் 15 வருடங்களுக்குள் செலுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | செயற்திட்டம் 2022 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் அடிப்படைத் தேவைப்பாடொன்றாக காணப்பட்ட தரவு நிலையக் கட்டிடம் நிர்மாணிக்கப்படாமையால் செயற்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள் மற்றும் எதிர்பார்த்த நலன்களை உரிய முறையில் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. | தரவு நிலையம் நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்ட போதிலும் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முறையான குத்தகை உடன்படிக்கை ஒன்று 2022 ஜுலை மாதம் அளவிலும் வழங்கப்படாத காரணத்தினால் செயற்திட்டம் முடிவடைவதற்கு அண்மித்த (2022 திசெம்பர்) வரை நிர்மாண வேலைகள் ஆரம்பிக்க முடியாமல் இருந்தது. இரத்மலானை வேலைக்கள அலுவலகத்தில் (Workshop) அனைத்துத் தேவையான விஷேட பிரிவுகள் அடங்கிய தரவு நிலையம் செயற்திட்டக் குறிக்கோள் மற்றும் தேவைப்பாடுகளின் படி தற்போது நிறுவப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கட்டிடம் நிர்மாணிப்பதற்கு தேவையான செயற்பாடுகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பத்தரமுல்ல நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணியொன்றில் தரவு நிலைய கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ரூபா 259.1 மில்லியன் தொகை எனப்படும். யூரோ 1,473,462 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 329.8 மில்லியன் தொகை எனப்படும் யூரோ 1,875,447 இற்கான நிச்சயமற்ற ஒதுக்கமொன்றினையும் தரவு நிலையத்திற்காக பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய மொத்தப் பெறுமதியில் 15 சதவீதம் ஆகிய ரூபா 544.2 மில்லியன் எனப்படும் யூரோ 3,094,488 தொகை முற்பணம் ஒன்றாக நெதர்லாந்து ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், காணியின் உரிமை கிடைத்திருக்காமையால் தரவு நிலையம் நிர்மாணித்திருக்காததுடன், செலுத்தப்பட்டிருந்த யூரோ 3,094,488 இற்கான முற்பணத் தொகை விளைவற்று காணப்பட்டது. | இங்கு தரவு நிலையம் நீர் வளங்கள் சபையில் காணப்படும் கட்டிடம் ஒன்றில் நிறுவப்பட்ட காரணத்தினால் ஏற்பட்டிருந்த சேமிப்பு தொடர்பாக செயற்திட்ட பணிப்பாளர்களினால் திறைசேரியின் வெளிநாட்டு மூலவள திணைக்களத்திற்கு மற்றும் பணிப்பாளர் (வெளிநாட்டுக் கடன் - 1) - திறைசேரித் திணைக்களம், பிரதான கணக்காளர் - நீர்ப்பாசன அமைச்சுக்கும் பிரதிகளுடன் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, அந்த மீதியை அடிப்படையாகக் கொண்டு கடன் தவணைகள் கொடுப்பனவு செய்யும் போது அந்தக் கழித்தல்களையும் உள்ளடக்கி கடன் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றன என வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. | முற்பணங்கள் தாமதம் இன்றி அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், பொறுப்புச் சொல்ல வேண்டிய சபையின் உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கைகள் கடைபிடிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையின் துளைத்தல் பிரிவிற்கு துளைத்தல் முகாமையாளர் ஒருவர் 11 துளைத்தல் உத்தியோகத்தர் உட்பட 52 பேர்களைக் கொண்ட உதவிப் பதவியணி ஒன்று இணைக்கப்பட்டிருந்ததுடன், அந்தப் பதவியணியினருக்காக சம்பளங்கள், மேலதிக நேரம் பிரயாணச் செலவு மற்றும் ஏனைய கிரயங்களாக ரூபா 65,965,000 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. அந்த பிரிவிற்கு சொந்தமாக காணப்பட்ட 18 துளைக்கும் இயந்திரங்களில் 09 மாத்திரம் செயற்படு நிலையில் காணப்பட்டதுடன், அவற்றில் செயற்திட்டதிலிருந்து கிடைத்திருந்த 02 புதிய துளைக்கும் இயந்திரங்களுக்காக பராமரிப்பு மற்றும் சேவைச் செலவுகள் மற்றும் திருத்த வேலைச் செலவுகள் மிகையாக காணப்பட்டமையால் | துளைக்கும் பிரிவிற்கு சொந்தமாக 18 துளைக்கும் இயந்திரங்களில் 03 தொகை 2023 ஆண்டில் ஏலவிற்பனை செய்யப்பட்டது. மீதியான 15 இல் 06 தொகை பழைய துளைக்கும் இயந்திரங்களாக காணப்பட்டதுடன், அவற்றில் 02 நெதர்லாந்து செயற்திட்டத்தின் மூலம் கிடைத்திருந்த நவீன துளைக்கும் இயந்திரங்களாகும். அவற்றை நடாத்திச் செல்வதில் பராமரிப்புச் செலவு, சேவை மற்றும் திருத்த வேலைச் செலவு மிகையாக காணப்பட்டமையால் மீதியான 07 இயந்திரங்களால் மாத்திரம் 2023 ஆண்டு குழாய்க் கினறுகள் துளைக்கப்பட்டது. நெதர்லாந்து செயற்திட்டத்திற்கு ஊடாக கிடைத்திருந்த 02 புதிய துளைக்கும் இயந்திரங்கள் IWWRMP செயற்திட்டத்தின் பரிசோதனைக் குழாய்க் கினறுகள் | துளைக்கும் பிரவு அலுவல்களை மீளாய்வு செய்து மனிதவளம் செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றை பயன்படுத்தியிருக்கவில்லை. மீதியான 07 துளைக்கும் இயந்திரங்களினால் மீளாய்வாணடின் போது 58 குழாய்க் கினறுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அதன்படி, செயற்படு நிலையில் காணப்பட்ட ஒரு இயந்திரத்தின் மூலம் 08 குழாய்க் கினறுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. ஒரே இயந்திரத்திற்காக துளைக்கும் உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் 08 பேரைக் கொண்ட உதவிப் பதவியணியொன்று இணைக்கப்பட்டிருந்ததுடன், அந்த ஒவ்வொரு தொகுதியிலும் பதவியணியினால் இரண்டு மாதங்களில் ஒரு குழாய் கினறு மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | நிர்மாணிப்பதற்காக ஈடுபடுத்தப்படவுள்ளது. | |
| (i) | 2018 ஆண்டு முதல் சபையின் துளைக்கும் பிரிவிற்கு கிடைத்திருந்த கட்டளைகளின் எண்ணிக்கை 280 இலிருந்து 58 வரை வருடாந்தம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்திருந்தது. அதன்படி, அந்தப் பிரிவின் செயற்பாடுகளின் திறமையின்மை தொடர்பாக பகுப்பாய்வொன்று மேற்கொண்டு தேவையான சரி செய்தல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | தனியார் துறையினரால் நிர்மாணிக்கப்பட்ட குழாய் கினறுக்காக செலவிடப்படும் தொகையை விட கூடிய தொகையொன்று சபையினால் குழாய் கினறுகள் நிர்மாணிக்கும் போது மேற்கொள்ளப்படுவதனால் குழாய்க் கினறு சபைக்கு கிடைப்பது மிகவும் குறைவாகவே இருத்தல், நிர்மாணிப்பதற்கு முடியாத மற்றும் சுற்றாடல் மற்றும் பொதுமக்கள் சிக்கல்கள் காணப்படும் இடங்களிலும் வர்த்தக குறிக்கோளுடன் குழாய்க் கினறுகள் நிர்மாணிக்க வேண்டிய தரப்பினரிடம் மாத்திரம் சபைக்கு குழாய்க் கினறுகள் நிர்மாணிப்பதற்கான கட்டளைகள் கிடைக்கப் பெறல், கொவிட் தொற்றுநோய் மற்றும் ஏனைய காரணங்களினால் அரச செயற்திட்டங்கள் நிறுத்தப்படல், சட்டரீதியற்ற முறையில் குழாய்க் கினறுகள் நிர்மாணித்தல் மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தலுக்கு முட்டுக்கட்டைகள் காணப்படல் ஆகிய விடயங்களின் காரணமாக சபைக்குக் கிடைக்கும் குழாய்க் கினறுகளின் எண்ணிக்கை குறைந்திருந்தது. | துளைக்கும் பிரிவிற்கு கட்டளைகள் பெற்றுக்கொள்வதற்காக வேலைத் திட்டமொன்று போலவே கிரயம் தொடர்பாகவும் மீண்டும் மதிப்பாய்வொன்று மேற்கொள்ள வேண்டும். |

## 3.3 சரச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர் வளங்கள் சபை 1978 ஆண்டு முதல் நடாத்திச் சென்றிருந்த கொழும்பு 07 ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணிக்காக 2013 ஆண்டு முதல் வருடாந்தம் ரூபா 12,772,000 தொகைக்கான வாடகைத் தொகையொன்ற செலுத்தப்பட்டு வருடாந்த குத்தகை அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளும் படி திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரினால் சபைக்கு அறிவித்திருந்த போதிலும், அதற்கு இணங்கியிருக்காமையால் 2019 ஆண்டில் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பின்னர், காணியை அனுபவித்தல் தொடர்பாக இணக்கமொன்று ஏற்படுத்திக்கொள்ளுமாறு சட்டமா அதிபரினால் திம்பிகஸ்யாய பிரதேச செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கும் போது சட்டமா அதிபரின் ஆலோசனைகளின் படி செயற்படாமல் 45 வருடங்களாக தலைமை அலுவலகம் நடாத்தப்பட்டு வந்த வளாகம் அப்போதைய பிரதமர் பயன்படுத்தி வந்த உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தை விரிவாக்கும் கருமங்களுக்காக அமைச்சரவை அங்கீகாரம் ஒன்று இன்றி ஒப்படைக்கப்பட்டிருந்தது. தலைமை அலுவலகம் 2021 ஜூலை 18 திகதி முதல் 2022 ஜூலை 15 திகதி வரை இராஜகிரிய பிரதேசத்தில் தனியார் வாடகைக் கட்டிடம் ஒன்றிலும், 2022 ஆகஸ்ட் 01 திகதி முதல் நாவல கொஸ்வத்த பிரதேசத்தில் தனியார் கட்டிடம் ஒன்றிலும் நடாத்தப்பட்டு வந்திருந்தது. அதற்காக 2021 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை கட்டிட வாடகை என ரூபா 30,511,722 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கொழும்பு 07, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை 2ஏ இலக்கம் கொண்ட இடத்தில் நீர் வளங்கள் சபை நிறுவப்பட்டிருந்ததுடன், சபை வாணிபம் சாரா நிறுவனமாக இருந்தமையால் 2001 , 2002 , 2014 மற்றும் 2017 கடிதங்களின் மூலம் அப்போதைய தலைவர்களினால் இந்தக் காணியை மானியமாக அல்லது நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற்றுத் தருமாறு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் மற்றும் மேல் மாகாண காணி ஆணையாளருக்கு கோறிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், அந்த கோறிக்கைகளுக்கு பதில் கிடைக்காமையால் 2017 வரை குத்தகை செலுத்துவது தொடர்பாக இணக்கப்பாடொன்று ஏற்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கும் போது திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் 2016.07.05 திகதி கடிதம் ஒன்றின் மூலம் 2013 முதல் 2016 வரை நிலுவைத் தொகையென ரூபா 43,637,666 தொகை மற்றும் 2017.12.14 திகதி கடிதம் ஒன்றின் மூலம் ரூபா 56,409,666 தொகை செலுத்தும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. நீர் வளங்கள் சபை வாணிப நிறுவனம் ஒன்றாக காணப்படாமையால் அந்தத் தொகையை செலுத்த முடியாது என தலைவர்களினால் பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2016.12.06 திகதிய அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் மூலம் இந்தக் காணி கொழும்பு நகரத் திட்டத்தின் படி கொடுப்பனவு ஒன்றின்றி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தாக்கப்பட்டு நீர் வளங்கள் சபைக்கு பத்தரமுல்ல ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் 40 பர்சஸ் காணியொன்று வருடாந்த | நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளுக்காக முறையான குத்தகை உடன்படிக்கையொன்று கையொப்பமிட்டு சபையின் தலைமை அலுவலகத்தை அங்கு நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.
நீர் வளங்கள் சபை குறிப்பிட்ட வளாகத்திலிருந்து செல்வதற்கு நேரிட்டது கொழும்பு 07 விஜேராம மாவத்தை 117 இலக்கத்தில் அமைந்துள்ள முன்னைய ஜனாதிபதி போலவே அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தை
விரிவாக்குவதற்காக காணியின் ஒரு பகுதி உரித்தாக்கப்பட்டமையால், நெதர்லாந்து அரசாங்கத்தின் கடன் உதவியின் கீழ் பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 40 பர்சஸ் காணி நீர் வளங்கள் சபையின் தலைமை அலுவலகம் மற்றும் தரவு நிலையம் நிர்மாணிப்பதற்காக ரூபா 200 மில்லியன் தொகை வழங்கப்பட இருந்த போதிலும், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கையொப்பமிடுவதை தொடர்ச்சியாக பிட்போட்டமையால் இது வரை வாடகைக் கட்டிடமொன்றில் நீர் வளங்கள் சபையின் தலைமை அலுவலகத்தை நடாத்திச் செல்ல நேரிட்டிருந்தது.

## 3.4 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் செயற்படுத்தும் தரப்பினர் (Implementing Partner) என செயற்பட்டிருந்த 02 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் ரூபா 7,850,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு ரூபா 802,000 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன்படி, குறிப்பிட்ட செயற்திட்டத்திற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 89 சதவீதம் ஆண்டின் போது பயன்படுத்தாமையால் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | 2023 ஆண்டிற்கான வெளிக்கள அலுவல்கள் மேற்கொள்ளும் போது இறுதிக் காலாண்டில் ஏற்பட்டிருந்த மிகை மழைக் காலநிலை காரணமாக திட்டமிடப்பட்டவாறு வெளிக்கள அலுவல்கள் மேற்கொள்ளல் கடினமாக இருந்தது. இந்த அலுவல்களை முறைப் பிரகாரம் 2024 ஆண்டின் போது மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | பாதீட்டின் மூலம் ஒதுக்கப்படுகின்ற ஏற்பாடுகள் திட்டத்திற்கு இணங்க செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |